



# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*






VOL - 4 ISSUE - 41 Editorial : 044-42077328 / 7305837388

## போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும் - அதிகாரிகளுக்கு அமைச்சர் சிவசங்கர் உத்தரவு...



சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் நேற்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், தனி அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலொசனை நடத்தினார்.

மகளிர் கட்டணமில்லா பயண திட்டத்தின்படி, 297.71 கோடி மகளிர் பயணங்கள் மேற்கொண்டதை ஆராய்ந்து, இத்திட்டத்தை செம்மைப்படுத்தும் விதமாக புதிய பஸ்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பாகவும் அதிகாரிகளுடன் அவர் ஆலோசித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது:- பொதுமக்கள் பெரிதும் சார்ந்துள்ள பஸ் போக்குவரத்தை நிறைவாக அளிக்க புதிய பஸ்களை விரைவில் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற முதல்-அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, புதிய பஸ்களின் ஒப்பந்தப் புள்ளிகள் குறித்தும், பழைய பஸ்களை புதுப்பிப்பது குறித்தும் ஆய்வு செய்து, அதை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தற்போது தமிழகம் முழுவதும் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், மாணவ, மாணவிகளுக்காக இயக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்து, தேவைக்கு ஏற்ப கூடுதல் பஸ்களை இயக்க வேண்டும். பள்ளிகள் தொடங்குவதற்கு முன் பஸ்கள் பள்ளியை சென்றடையும் வகையில் இயக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். போக்குவரத்துக் கழகங்களில், பணியின் போது இறந்த பணியாளர்களினவாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான வேலை வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்றவர்களின் பணப் பலன்களை அவர்கள் ஓய்வு பெரும்போதே வழங்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இறந்துபோன பணியாளர்களின் பணப்பலனை அவர்களின் குடும்பத்தினருக்கு உடனே வழங்க வேண்டும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் மன அழுத்தத்தை போக்கும் வகையில், விளையாட்டுகளை மீண்டும் அறிமுகப்படுத்தி அவர்களை அதில் ஈடுபடுத்த வேண்டும்.

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைகளை அவ்வப்போது கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். போக்குவரத்துக் கழகங்களில் பஸ்களின் இயக்க வருவாய் மற்றும் செலவுகள், இதர வருவாய் மூலம் நிதியை பெருக்குதல், செலவுகளை குறைத்தல் மற்றும் தற்போது செயல்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அமைச்சர் ஆய்வு செய்தார்.

## வேளச்சேரியை கண்காணிக்க 150 கேமராக்கள் அமைப்பு...

150 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்ட கணினி அறை வேளச்சேரி J7 காவல் நிலைய வளாகத்தில் சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது இங்கு உள்ள கேமராக்கள் மிகத் துல்லியமாக கணிக்கின்றன இது வேளச்சேரிக்கு மிக மிக தேவை இதை அமைப்பதற்கு முழு முயற்சி எடுத்துக் கொண்ட நம்முடைய வேளச்சேரி காவல்துறை ஆய்வாளர் திரு சந்திரமோகன் சார் அவர்களுக்கு வேளச்சேரி நலவாழ்வு சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.






## சென்ட்ரல் ரெயில் நிலைய வளாகத்தில் திறந்தவெளியில் மின்சார ரெயில் பெட்டி கண்காட்சி ...

சென்னை மாநகரின் முக்கிய அடையாளமாக சென்ட்ரல் ரெயில் நிலையம் திகழ்கிறது. இங்கு பயணிகளை கவரும் வகையில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடந்து வருகின்றன. சென்ட்ரலில் மெட்ரோ, மின்சார ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் அனைத்தும் உள்ளன. இங்கு வரும் பயணிகளுக்காக பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சென்ட்ரல் ரெயில் நிலையம் அருகே அமைக்கப்பட்ட சென்ட்ரல் சதுக்கம் பயணிகளிடம் வரவேற்பு பெற்று உள்ளது. நடைபாதைகள், ஓய்வு இருக்கைகள், சுரங்க நடைபாதைகள், புல்வெளிகள் ஆகிய பல்வேறு வசதிகளை பயணிகள் ஆர்வமாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் சென்ட்ரல் ரெயில் நிலைய வளாகத்தில் பயணிகளை கவரும் வகையில் மின்சார ரெயில் பெட்டி ஒன்று பயணிகள் பார்வைக்கு



கண்காட்சியாக வைக்கப்பட்டு உள்ளது. சென்ட்ரல் விரைவு ரெயில் நிலையம் மற்றும் புறநகர் மின்சார ரெயில் நிலையங்களுக்கு இடையே திறந்த வெளியில் தண்டவாளம் அமைத்து அதன் மேல் இந்த மின்சார ரெயில் பெட்டி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சென்ட்ரல் நிலையத்துக்கு வரும் ஆயிரக்கணக்கான பயணிகளை இது கவர்ந்து வருகிறது. ரேயில் நிலையத்திற்கு செல்லும் பயணிகள் ஆர்வத்துடன் இதனை பார்த்து செல்கிறார்கள். சிலர் ரெயில் பெட்டி அருகே நின்று "செல்பி" புகைப்படம் எடுத்து மகிழ்ந்து வருகிறார்கள்.

# CLASSIFIED

## VELACHERY

**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN

ONLINE & OFFLINE

Contact

9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE

**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

## Mother Land

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

Contact

**72992 62185**
**90947 52300**

---

## WANTED

*Tele Callers*

CONTACT

**7305837388**

---

**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery*
*( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT

8015427018

---

## WANTED

Front Desk Executive

*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

*Contact*

**9841030772**

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE

**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**

## NFC

**NIMS FOOD CONSULTANT**

**E. KAMESH KUMAR** IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

**Mobile:9790 902400**

email:Consultantnfc@gmail.com

---

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | ₹ விலை 1 லிட்டர் |
| 102.74 | 94.33 |

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

**Online Class for Women and Kids**

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT*

**89391 53560**

---

## DESIGNING

**Tamil & English DTP designing works Rs. 500/- only**

*Contact*

**7358182075**

---

## WANTED

**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*

**4435504719**
**8870393999**

---

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5642 | 1 கிராம் | 6015 |
| | 8 கிராம் | 44336 | 8 கிராம் | 48120 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 78.50 | | |
| | 1 கிலோ | 78500 | | |

Friday Price

---

**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*

**909 494 7285**

---

## Butter Flies

**Beauty Parlour & Beauty Training Institute**

Recognised by Tamilnadu Governmen

**Ladies & Kids Only**

Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202

binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here Drivers Available

Contact V. Marimuthu

**9840508030**

---

## RENTAL

LAND BUYING, SELLING

**All Kind of Building Repair Works Undertaken**

Contact B. Rajendran

**90809 94500**

---

## SERVICES

**Plumbing works**

**Contact Govindaswamy**

87544 09752

ஆன்மீக தகவல்

# பிரம்ம முகூர்த்தம் சிறப்பம்சங்கள் !

பிரம்ம முகூர்த்தம் என்பது காலை 4.30 மணி முதல் 6 மணி வரையாகும்.பிரம்மனுடைய பத்தினி சரஸ்வதி தேவி விழித்துச் செயற்படும் நேரம் பிரம்மமுகூர்த்தம் என்பதும் நம்பிக்கை. இதனால் இந்நேரம் சரஸ்வதி யாமம் எனவும் அழைக்கப்படுகின்றது.

மனதின் பிரச்னைகளை அகற்றவும் இறைவனின் அன்பில் மனதை நிலை நிறுத்தவும், இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு அற்புதமான நேரம் பிரம்ம முஹூர்த்தம். இந்த பிரம்ம முஹூர்த்தம் என்பது பிரம்மா சிவபெருமானை நினைத்து அற்புத வரங்களை பெற்றதால் பிரம்ம முஹூர்த்தம் என்ற சொல் வழக்கில் வந்தது.

படைப்பு கடவுளான பிரம்மா நீண்டகாலமாக உறங்கிவிட்டதால் அவரை உறக்கத்திலிருந்து எழுப்பிய சிவபெருமான்.. இந்த கலியுகத்தை அதாவது பிரம்மாவின் இரவை பிரம்மாவின் பகல் ஆக்கவேண்டும் அதாவது சத்யுகம் என்ற உலகத்தை இந்த பூமியில் ஏற்படுத்தவேண்டும் என்று பிரம்மாவிற்கு கட்டளை இட்டார்..அதன் படி தன்னுடைய நிலையில் உறங்கி கொண்டிருந்த பிரம்மாவும் விழிப்படைந்து இறைவன் சிவபெருமானை பிரார்த்திக்க அவரிடம் வரங்களை பெற எந்த நேரம் உகந்தது என்று வினவ..

சிவபெருமானும் பூமியின் கணக்குப் படி அதிகாலை நேரம் என்னை நினைக்க என்னிடமிருந்து அளவிடமுடியாத சக்தியை பெற நினைத்த காரியத்தை சாதித்துக்கொள்ள அதிகாலை நேரத்தையும், சந்தியா காலம் எனும் சாயங்கால வேலையையும் பயன் படுத்திக்கொள்ள கட்டளையிட்டார்.பிரம்மாவும் அதன்படி பூமியின் கணக்குப்படி நாள் முழுவதும் இறைவனுடைய நினைவில் இருந்தாலும் அதிகாலை என்ற பிரம்ம முஹூர்த்தத்தையும் சந்தியா காலத்தையும் மிக சிறப்பான பயிற்சிக்காக சிவபெருமான் கட்டளைப்படி பயன்படுத்தினார்.பிரம்மாவே இந்த அதிகாலை நேரத்தில் சிறப்பு பயிற்சி செய்ததால் அவரின் பெயராலேயே பூமியின் கணக்குப்படி அதிகாலை 4-5வரை பிரம்ம முஹூர்த்தம் என்றே அழைக்கப்படுகின்றது.

இந்த நேரத்தில் நாமும் விழித்திருந்து குளித்தோ..முடியாதவர்கள் கை,கால்களை அலம்பி பல் துலக்கி தன்னை நெற்றியின் மத்தியில் வசிக்கும் ஒரு ஒளியான ஆத்மா என்று உணர்ந்து பரமாத்மா சிவனை ஒரு உடலற்ற ஒளியாக நினைவு செய்ய பிரம்மா எந்த சக்தியை அடைந்தாரோ அப்படிப்பட்ட அளவிடமுடியாத சக்தியை ஈஸ்வரனிடமிருந்து நாமும் அடையமுடியும்.

பிரம்ம முஹூர்த்ததில் இறைவன் சிவபெருமானை நினைபவருக்கு நாள் முழுவதும் தன்னை தானாகவே அவர் நினைவுக்கு வருவார் என்பதுதான் உண்மை.

சூரியன் உதிப்பதற்கு முன்புள்ள அதிகாலைப் பொழுதை உஷத் காலம் என்பர். அந்த சமயத்தில் தேவர்கள், சிவபார்வதி, மகாலட்சுமி போன்ற தெய்வங்கள் வானமண்டலத்தில் சஞ்சரிப்பதாக ஐதீகம்.

சூரியன் உதித்தெழுவதற்கு நாற்பத்தெட்டு நிமிடங்களுக்கு (விடியற் காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை உள்ள காலம்) முன் பிரம்ம முகூர்த்தம் ஆரம்பமாகின்றது.

பிரம்ம முகூர்த்தம் என்பது பிரம்மன் என்றால் நான்முகனைக் குறிக்கின்றது.

சிவபெருமானின் பெருங்கருணையினால் தான் படைத்தற் தொழிலைப் புரியும் நான்முகன் ( பிரம்மன்) தன்னுடைய நாவில் சரஸ்வதியை அமரச் செய்து 24 கலைகளையும் படைத்தார்.

பிரம்ம முகூர்த்ததில் திருமணம் செய்வது மேலும் பிரம்ம முகூர்த்ததில் வீட்டு கிரஹப்பிரவேசம் செய்வது போன்ற சுப காரியங்கள் நடைபெற்றால் அங்கு சுபத்தன்மை ஏற்படும். அவ்விடம் எவ்வித அமங்களமும் ஏற்படாது. மங்களம் குடிகொள்ளும். அதனால், பிரம்ம முகூர்த்தத்தின் மகத்துவம் பற்றி முழுவதாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எல்லோருக்குமே இருக்கும்.

காலை 4.30 மணி முதல் 6 மணிக்குள்ளான வேளைக்கு பிரம்ம முகூர்த்தம் என்று பெயர். இரவில் உறங்கும் உயிர்கள் மீண்டும் எழுந்திருப்பதே ( மரணத்திற்கு ஒத்திகை போன்றது) சற்றேறக்குறைய மறுபிறவிதானே

எனவே, ஒவ்வொரு நாளும் காலையில் மறு பிறவி பெறுவதை சிருஷ்டி (படைத்தல்) என்று சொல்லலாம். இத்தொழிலை சிவபெருமானின் பெருங்கருணையால் செய்பவர் பிரம்மா.

எனவே இவரது பெயரால், விடியற்காலைப் பொழுதை பிரம்ம முகூர்த்தம் என்று வைத்துள்ளார்கள். பிரம்ம முகூர்த்த வேளைக்கு திதி, வார, நட்சத்திர, யோக தோஷங்கள் கிடையாது. இது எப்போதுமே சுபவேளை தான்.

இந்நேரத்தில் எழுந்து குளித்து இறை வழிபாட்டைச் ( சிவவழிப்பாட்டைச் செய்வது) செய்ய வேண்டும். பிறகு நமது வேலைகளைச் செய்ய துவங்கினால் அன்று முழுவதும் உடலும், உள்ளமும் உற்சாகத்துடன் இருக்கும்.

நாம் தொடங்கும் செயல்கள் எல்லாம் வெற்றியாகத்தான் இருக்கும். பிரம்ம முகூர்த்தத்தில், வீட்டில் பூஜை அறையில் விளக்கேற்றி வழிபடுவதன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் பெறலாம் என்பது ஐதீகம்.

உபாசனைக்கு காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும் என்பது முக்கியமானதொரு கடமையாகும். இக்காலம் ஜீவன்களை எழச்செய்வது போல மந்திரங்களையும் எழச் செய்கின்றது.

மந்திரங்கள் ஜெபிப்பவனுடைய மனதிலிருந்து படிப் படியாக அவனுடைய நுண் அலைகளை ஒலி அலைகளாக மேலே எழுப்பிச் செபம் செய்பவனது மந்திர ஒலியானது வெளிப்படச் செய்கிறது. இவ்வாறு பிரம்மமுகூர்த்தத்தில் அவன் செய்யும் ஜெபம் அவன் செல்லும் இடமெங்கும் அவனை அறியாமலே நன்மைகளை விளைவிக்கின்றது.

அதிகாலையில் எழுதுவதும், படிப்பதும் சிறந்தது என பெரியவர்கள் கூறுவார்கள். இதை இன்று விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்துக்கள் அதிகாலையில் எழுந்து வீடு வாசல் பெருக்கி, நீர் தெளித்து கோலமிடுவார்கள். நமது புராண இதிகாசங்களில் முனிவர்கள் அதிகாலையில் நீராடித், தியானத்தில் இருந்ததை அறிகின்றோம்.

அவர்களது அபிமான்ய சக்தியையும் அவற்றைக் கொண்டு அவர்கள் செய்த விந்தைகளையும் ( அதிசயத்தையும், அற்புதத்தையும்) படித்திருக்கின்றோம். அவற்றை நாம் முழுமையாக நம்பாவிடினும் பிரம்ம முகூர்த்தத்திற்கு அபாரசக்தி ஒன்றுள்ளது என்பதை உணர்வுபூர்வமாக அனுபவித்து அறியலாம்.

எனவே அதிகாலை எழுந்திருக்கும்போது சில நன்மைகள் உண்டு.

இந்த நேரத்தில் கண்டிப்பாக தூங்கக் கூடாது. தியானம், வழிபாடு போன்ற பயனுள்ள பணிகளைச் செய்யவேண்டும். இந்த நேரத்தில் செய்யும் வழிபாடு பலமடங்கு புண்ணியத்தை தரும்.

தீபம் ஏற்றுவதற்கு உகந்த நேரமாக அதிகாலை பிரம்ம முகூர்த்தமான நான்கு மணி முதல் ஆறு மணி வரையும் (சூரிய உதயத்திற்கு முன்) கருதப்படுகிரது. காலையில் ஏற்றி வழிபட்டால் அனைத்து செயல்களும் நன்மையைத் தரும். பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து செயற்படும் போது மனநிலையானது ஒரு நிலைப்படுகின்றது. அதற்கு ஏற்ற காலமாக இது விளங்குகின்றது. அதிகாலையில் சூரிய வெப்பம் கிடையாது.

சந்திரனுடைய வெப்பதிப்ப குளுமையும் கிடையாது.இவை இரண்டுக்கும் மத்தியில் நிலவுவது பிரம்ம முகூர்த்தம் இந்நேரத்தில் எழுந்து ஜெபிப்பது. தியானம் செய்வது, யோகம் செய்வது, கல்வி கற்பது, வேலைகள் செய்வது சிறந்த பயனைத் தருவதோடு ஞாபக சக்தியும் விருத்தியாகும்.

இந்நேரத்தில் எழுந்து குளித்து இறைவழி பாட்டைச் செய்து மத்த வேலைகளைச் செய்ய துவங்கினால் அன்று முழுவதும் வெற்றிதான்

பிரம்ம முகூர்த்தத்தில், வீட்டில் விளக்கேற்றி வழிபடுவதன் மூலம் சகல சௌபாக்கியங் களையும் பெறலாம் என்பது ஐதீகம்.

உபாசனைக்கு காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும் என்பது முக்கியமானதொரு கடமையாகும். இக்காலம் ஜீவன்களை எழச்செய்வது போல மந்திரங்களையும் எழச் செய்கின்றது.

மந்திரங்கள் ஜெபிப்பவனுடைய மனதிலிருந்து படிப் படியாக அவனுடைய நுண் அலைகளை ஒலி அலைகளாக மேலே எழுப்பிச் ஜெபம் செய்பவனது மந்திர ஒலியானது வெளிப்படச் செய்கிறது. இவ்வாறு பிரம்மமுகூர்த்தத்தில் அவன் செய்யும் ஜெபம் அவன் செல்லும் இடமெங்கும் அவனை அறியாமலே நன்மைகளை விளைவிக்கின்றது.

அதிகாலையில் எழுதுவதும், படிப்பதும் சிறந்தது என பெரியவர்கள் கூறுவார்கள். இதை இன்று விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

பிரம்ம முகூர்த்த வேளைக்கு திதி, வார, நட்சத்திர, யோக தோஷங்கள் கிடையாது. இது எப்போதுமே சுபவேளை தான்.

## அழகுக் குறிப்பு

# காய்ச்சாத பாலை சருமத்திற்கு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்...

பாலில் வைட்டமின்பி, ஹைட்ராக்ஸி அமிலங்கள், கால்சியம், சக்தி வாய்ந்த ஆக்ஸிஜனேற்றங்கள் நிறைந்த நன்மைகளைக் கொண்டிருக்கிறது. இதை சருமத்தில் பயன்படுத்தும் போது அவை நாள் முழுக்க சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்கும். முகப்பரு இருக்கும் போது கூட வெறும் பாலை கொண்டே பதமாக தோல் பாதிப்படையாமல் சுத்தமாக்கலாம். எல்லா சருமத்திற்கும் ஏற்ற பாலை நீங்கள் எப்படி எதற்கு பயன்படுத்தலாம் என்பதை பார்க்கலாம்.

பால் சருமத்தை இயற்கையாகவே சுத்தம் செய்யும் சிறந்த க்ளென்சிங் என்று சொல்லலாம். முகத்தில் இருக்கும் இறந்த செல்களை சரும பாதிப்பில்லாமல் வெளியேற்றுகிறது. சரும சுத்தம் என்னும் போது அவை முகத்தில் கரும்புள்ளிகள், முகப்பரு போன்றவற்றையும் வரவிடாமல் தடுக்கவும் உதவுகிறது என்பதால் இவை எப்போதும் முகத்துக்கு நன்மை செய்யகூடியது.

பச்சை பால் உங்கள் சருமத்திற்கு பல அதிசயங்களை செய்யும். இந்த காரணத்திற்காக, உங்கள் தோல் பராமரிப்பு தேவைகளுக்கு பச்சை பால் பயன்படுத்த அழகு நிபுணர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

மெல்லிய துணி அல்லது பஞ்சை காய்ச்சாத பாலில் நனைத்து சருமம் முழுவதும் படரும் படி தேய்க்க வேண்டும். தினமும் செய்து வந்தால் மேக் அப் தேவையில்லை. பாலில் இருக்கும் லாக்டிக் அமிலம் சக்திவாய்ந்தது. சருமத்துக்கு பொலிவை அளிக்க கூடியது. அதனாலேயே இதை இயற்கை மாய்சுரைசர் என்று அழைக்கிறோம். சருமத்தில் ஈரப்பசை இல்லாவிட்டால் அவை வறட்சிக்குள்ளாகும். அதனால் எப்போதும் சருமத்தை மென்மையாக வைத்திருக்க உரிய பராமரிப்பு செய்ய வேண்டியிருக்கும். இது உங்கள் சருமத்தை பிரகாசமாக்குகிறது, நீரேற்றத்தை அதிகரிக்கிறது, சுருக்கங்கள், நேர்த்தியான கோடுகள் மற்றும் வயதானதை குறைக்கிறது.

பச்சை பால் மற்றும் ரோஸ் வாட்டர் பேஸ் பேக் சரும டோனராக செயல்படுகிறது. சருமத்தின் நெகிழ்ச்சித்தன்மையை மேம்படுத்துகிறது, சருமத்தை இறுக்கமாக்குகிறது, சரும தொய்வைத் தடுக்கிறது மற்றும் வயதானதைத் தடுக்கிறது. இரண்டு டேபிள்ஸ்பூன் பச்சை பாலில் நான்கு முதல் ஐந்து சொட்டு ரோஸ் வாட்டர் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். உங்கள் முகத்தை சுத்தம் செய்த பிறகு ஒரு பருத்தி பந்தைப் பயன்படுத்தி இந்த கலவையை முகத்தில் போடவும். 15 நிமிடம் கழித்து உங்கள் முகத்தை சாதாரண அல்லது வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இந்த முறையை இரவில் போட்டு விட்டு காலையிலேயும் கழுவலாம்.

# வயலூர் முருகன் கோயில் அற்புதங்கள்: வாழ்வளிக்கும் வள்ளலே, வயலூர் பெருமானே...

முருகப்பெருமானின் பெருமை சொல்லும் ஆலயமாக இது இருந்தாலும், ஆதியில் இது சிவாலயமாகவே உருவானது என்கிறது தலவரலாறு.

ஆலயங்களின் அணிவகுப்பாகத் திகழும் நகரம் திருச்சி. இங்கே சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், காணாபத்யம் என எல்லாப் பிரிவுகளுக்கும் பிரசித்தமான பல கோயில்கள் உள்ளன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விழாக்களும் கோலாகலமும் நிறைந்திருந்த ஊர் இது என்று சங்க இலக்கியங்கள் கூறும். கோழி என்று வழங்கப்பட்ட உறையூரும் கல்லணையும் திருச்சியின் புராதனப் பெருமையைக் கூறும் என்றால், ஆனைக்காவும் திருவரங்கமும் இந்நகரின் புராணப் பெருமைக்குக் கட்டியம் கூறும்.

சங்க இலக்கியங்களில் பல இடங்களில் உறையூரைப் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. (உறையூர் தற்போது திருச்சியின் ஒரு பகுதியாக உள்ளது) வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை (குறுந்தொகை), உறந்தை அன்ன பொன்னுடை நெடுநகர் (அகநானூறு) இதுபோல புறநானூறு, நற்றிணை, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களும் உறையூரைக் கொண்டாடுகின்றன. பங்குனி உத்தர நாளில் காவிரி ஆற்றங்கரையில் பங்குனி முயக்கம் என்னும் பங்குனி திருவிழா நடைபெறும். பொங்கலிட்டுப் படைக்கும் பங்குனித் திருவிழாவில் தமிழர்களின் மூதாதையான முருகப்பெருமான் வழிபாடும் வேலன் வெறியாடலும் நடக்கும் என்றும் இலக்கிய குறிப்புகள் உள்ளன (அகநானூறு, நற்றிணை).





தோன்றுதொட்ட காலம் தொட்டே வேலன் வழிபாடு நடந்து வந்த இந்த திருச்சி மாநகரில் ஓர் அற்புதமான முருகப்பெருமான் ஆலயத்தைக் காணலாம். முருகப் பெருமானுக்குப் பிடித்தமான ஆலயங்கள் இரண்டு என்பார் அருணகிரிநாதர். ஒன்று திருச்செங்கோடு, மற்றொன்று திருச்சி வயலூர். திருச்சியில் இருந்து மேற்கே, 18 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது வயலூர். குமாரவயலூர் என்னும் வயலூர், வயல்கள் சூழ்ந்த இடம் என்பதால் இந்தப் பெயர் பெற்றது என்பர். இவ்வூரை "உறையூர் கூற்றத்து வயலூர்", "தென்கரை பிரமதேய நந்திவர்ம மங்கலம்" "ராஜகம்பீர வளநாடு" "மேலைவயலூர்" என்று குறிப்பிடுகின்றன.



அருணகிரிநாதரை திருவண்ணாமலையில் கம்பத்து இளையவராக தடுத்தாட்கொண்ட முருகப் பெருமான் முதன்புதலில் வயலூருக்குத்தான் வரச்சொல்லி உத்தரவிட்டார். அருணகிரிநாதர் இங்குள்ள முருகப்பெருமானை வழிபட்டு 18 பாடல்கள் புனைந்த பெருமை கொண்ட தலம் இது. இங்கிருந்தே திருப்புகழ் எனும் பெரும் பொக்கிஷம் உருவானது என்பதும் இவ்வாலய பெருமைகளில் ஒன்று.

முருகப்பெருமானின் பெருமை சொல்லும் ஆலயமாக இது இருந்தாலும், ஆதியில் இது சிவாலயமாகவே உருவானது என்கிறது தலவரலாறு. காலமறியா காலத்தில் காட்டு விலங்குகளை வேட்டையாடச் சென்ற ஒரு சோழ மன்னன், இங்கிருந்த கரும்பு ஒன்றை ஒடிக்க வாளால் வெட்டினான். அப்போது ஒடிந்த கரும்பிலிருந்து ரத்தம் வடிந்தது. இதனால் பதறிய சோழன் வயலைத் தோண்டிப் பார்க்கையில், அங்கே ஈசன் லிங்கமேனியாக காட்சி அளித்தான். அங்கேயே அவருக்கு ஓர் ஆலயம் எழுப்பி, ஆதிநாதர் என்ற திருநாமம் இட்டு வணங்கினான் என்று சொல்லப்படுகிறது. 9-ம் நூற்றாண்டில் இந்த ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டது.

ராஜகேசரிவர்மன், குலோத்துங்கச் சோழன், பரகேசி வர்மன், ராஜேந்திர சோழன் ஆகியோரால் திருப்பணிகள் கண்ட இந்த கோயிலின் கல்வெட்டுகள் ஆலயத்தின் பழைமையை எடுத்துக் கூறுகின்றன. இங்குள்ள ஆதிநாதர் தம்மை நாடிவரும் பக்தர்கள் கேட்பதை மறக்காமல் கொடுப்பதால் மறப்பிலி நாதர் என்றும அக்னி பகவான் வழிபட்டதால் அக்னீஸ்வரன் என்றும், விடங்கப் பெருமான், திருமகாதேவன், திருக்கற்றளிப் பெருமான் என பல நாமங்களால் வணங்கப்படுகிறார். இங்கு அம்பிகையின் திருநாமம் ஆதிநாயகி. இங்கே வீற்றிருக்கும் கணபதியைப் பொய்யாக் கணபதி என்பர். கைத்தல நிறைகனி... எனத் துவங்கும் அருணகிரிநாதரின் விநாயகர் ஸ்தோத்திரப் பாடல் உருவானதும் இவரால்தான்.



வயலூர் முருகப்பெருமான் என்று உலகெங்கும் பிரசித்தமான இந்த ஆலயத்தில் தெய்வானை, வள்ளி ஆகிய இருவருடனும் முருகப்பெருமான் இணைந்து ஈசனை இங்கு பூஜிக்கிறார்கள் என்பது ஐதீகம். தனி சந்நிதியில் வள்ளி - தெய்வானை சமேதராக காட்சி தருகிறார் வயலூர் முருகப்பெருமான். முயலகன் இல்லாத சதுர தாண்டவ நடராஜர், முருகப் பெருமானே தன் வேலினால் குத்தி உண்டாக்கிய சக்தி தீர்த்தம், வைகாசி விசாக சுவாதி நட்சத்திரத்தன்று நடைபெறும் சட்டத்தேர் விழா என இந்த ஆலயத்தில் அதிசயங்கள் அநேகம். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் திருப்பணிகள் செய்து வழிபட்ட திருத்தலம் இந்த வயலூர் முருகன் கோயில்.

"ஏழ்தலம் புகர் காவேரியால் விளை

சோழ மண்டல மீதே மநோகர

ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா"

என்று இந்த வயலூர் முருகப்பெருமானை எண்ணி திருவாவினன்குடியிலும் பாடி இருக்கிறார் அருணகிரிநாதப் பெருமான். எண்ணினாலும் தரிசித்தாலும் எண்ணிலடங்காப் பேறுகளை அள்ளித்தரும் வயலூர் முருகப்பெருமானை முடிந்தவர்கள் நேரில் தரிசிக்க நலம் பெருகும். வளம் தழைக்கும் என்பது வாரியார் சுவாமிகள் வாக்கு.


பரிகாரங்கள் மற்றும் வழிபாடுகள்

திருமண தோஷம் மற்றும் தடைகள் உள்ளவர்கள், முதல் நாள் இரவே இங்கு வந்து தங்கி, மறுநாள் சக்தி தீர்த்தத்தில் நீராடி, முருகப்பெருமானை வழிபட்டால் திருமணம் நடந்தேறும் என்பது நம்பிக்கை. ஆண்டு முழுக்க பக்தர்கள் இங்கு வந்து கூடி முடி இறக்குதல், காவடி எடுத்தல், பால் குடம் எடுத்தல், காது குத்தல், சஷ்டி விரதம் இருத்தல், ஆண்கள் அங்கபிரதட்சணம் செய்தல், பெண்கள் கும்பிடு தண்டமும், அடிப் பிரதட்சணமும் செய்வது என பல நேர்த்திக்கடன்கள் செய்கின்றனர். நாக தோஷம் மற்றும் குழந்தை வரம் இல்லாதோர் இங்கு வந்து தீர்த்தத்தில் நீராடி, வழிபட்டால் தோஷங்கள் நீங்கி, நற்பலன்கள் அடைவர் என்பது நம்பிக்கை.





## குறுக்கெழுத்துப் புதிர்





**இடமிருந்து வலம்:**

1. தேசிய பறவை வண்டி ஏறி வருகிறது
4. கடற்கரையில் ஒன்றின் பின் ஒன்றாக வந்துகொண்டே இருக்கிறது இந்த உாயநெெட
6. அழகு குறைந்தபோதும் அறிவழகன் மூளைக்காரன்
7. குழு அமைத்து உடுத்திக்கொள்
9. சோப்பு கொண்டு அடிக்கடி இப்படிச் செய்தல் கிருமிகளை நீக்கும்
11. சிலம்பு தேய்ந்து சிலம்பரசன் ஆகிவிட்டது
13. பொருளின் மதிப்பு
14. படத்தில் இருக்கும் பூச்சியின் பெயர்



**மேலிருந்து கீழ்:**

1. ஊட்டியை இப்படியும் பெருமையாகச் சொல்வார்கள்
2. வெயிலா மழையா புயலா என்று நமக்கு இப்படிச் சொல்வார்கள்
3. துணியையும் காகிதத்தையும் வெட்டப் பயன்படும்
5. மாமிசம் உண்ணாதவர்களை இப்படியும் சொல்லலாம்
8. தமிழில் 247 இருக்கிறது
10. இளைய சகோதரன்
12. உலகம்




## திருக்குறள்

[ 246 ]

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

Who grace forsake and graceless act
The former loss and woes forget.

## ALTERNATIVES

***Very hot - blistering***
***Very cold - arctic***
***Very tired - flagged***
***Very energetic - spry***
***Very happy - ecstatic***



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,
India.

## BOOK REVIEW OF THE WEEK

Hey guys, today we're reviewing Geronimo stilton and the Phoenix of destiny. The book features Geronimo stilton, the timid, soft-spoken rat getting dragged on another kingdom of fantasy adventure. This time Queen Blossom is acting very different. She orders Geronimo to fetch 7 things for her. But the things she orders him fetch for her are very odd and all have something to do with evil power. What has happened to her? Read to find out.

Positives:

Like every other Kingdom of Fantasy book, the best part is the riddles. There are so many riddles scattered throughout the book. All of them are equally interesting. The art style is also very good. The illustrations are lifelike enough.

Negatives:

The book is very long and gets a little too boring at times. But the story always picks up before you decide to close the book. The author could have cut some things out or could have properly fleshed out Wither and could have fully explained her backstory instead of just giving you agist. Wither is also the worst character in this book, easily. But in the other books she is my second favourite character besides Geronimo, himself. Speaking of Geronimo why was he so dumb throughout the book. I mean, one of the things Blossom orders Geronimo to get her was a literal coffin. What use would 'Blossom' have for a coffin. Now you could just say that Geronimo trusts 'Blossom' a lot, but he knows that Blossom was a Winged one and that she had a heart of gold. If you don't know what a Winged one is, let me explain. Winged ones are the purest and noblest ones in the Kingdom of Fantasy, they can do no harm to others. The only one who has strayed from the path of good is Wither, who got stung by an insect sent by Cackle, The Queen of Witches, which turned her evil. The segments of the quests are also a little imbalanced because one of the segments is 20 pages while another one was literally 50 pages long. The Fang County segment makes no sense at all. Why would an aristocrat, especially a ruler not have an idea of every family in the neighbouring regions. If you don't know who I'm talking about. I'm talking about Count Vampirat, The ruler of Fang County.

My Review: A mixed bag, but sure is fun to read.



*Yeddanapudi Jeyan*
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

ANANDAM LEARNING ACADEMY
www.amgp.in
CLASSES for 2nd to 12th by experienced Teachers
PHYSICS
CHEMISTRY
MATHEMATICS
BIOLOGY
SOCIAL STUDIES
SPELLING BEE
SPOKEN ENGLISH
SPOKEN HINDI
TAMIL / BASIC TAMIL
KEYBOARD
Contact: 99520 62573 / 96778 07469
ADDRESS
37F, VELACHERY - TAMBARAM ROAD
VIJAYANAGAR, VELACHERY - 42
(NEAR ADYAR ANANDA BHAVAN)

arcus
creating careers



Course
- Java training
- AWS training
- Software testing training
- Mainframe training

Value added services
- Interview preparation
- Project seminar
- Resume preparation
- Mock interviews
- Soft skill seminar

No.37, Diya Complex, Tambaram Main Road, Next to A2B Restaurant Vijayanar Nagar bus stand, Velacherry, Chennai - 600042
93827 29797
Chennai@arcusinfotech.com
https://arcusinfotech.com

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் தொழில் ரீதியாக பலன்களைப் பெற வாய்ப்புள்ளது, கடின உழைப்பின் வலிமையால், நீங்கள் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வைப் பெறலாம்.



**துலாம்**

நீங்கள் அடிக்கடி வீட்டுப் பொறுப்புகளில் இருந்து ஓடிவிடுவதைக் காணலாம், ஆனால் இந்த வாரம் அதைச் செய்வது உங்களுக்கு கடினமாக இருக்கலாம்.



**ரிஷபம்**

இந்த வாரம் பணப் பலன்கள் கிடைக்கும், பணம் எவ்வளவு வேகமாக வந்து சேருகிறதோ, அந்த அளவுக்குச் செலவழிக்க அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.



**விருச்சிகம்**

இந்த வாரம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அங்கும் இங்கும் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் கிடைக்காத வாய்ப்புகள் இந்த வாரம் கிடைக்கும்.



**மிதுனம்**

நீங்கள் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் பேராசை இந்த வாரம் உங்களுக்கு மிகப்பெரிய எதிரியாக இருக்கும்.



**தனுசு**

இந்த வாரம் உங்கள் உடன்பிறந்தவர்களின் சரியான ஆதரவை பெறுவீர்கள், அவர்களின் உதவியால் உங்கள் குடும்ப வாழ்க்கையை சீராக நடத்த முடியும்.



**கடகம்**

இந்த வாரம் சிறப்பு எதுவும் செய்யாமல், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் கவனத்தை உங்கள் பக்கம் எளிதாக ஈர்க்க முடியும்.



**மகரம்**

இந்த வாரம் நீங்கள் வீட்டு வேலைகளில் ஆர்வம் காட்டி வீட்டில் உள்ள பெண்களுக்கு உதவலாம். இது குடும்பத்தில் மரியாதை அதிகரிப்பு-தோடு,உறவை வலுப்படுத்தும் .



**சிம்மம்**

இந்த வாரம் உங்கள் சக ஊழியர்களில் ஒருவரால், உங்கள் இமேஜ் கெட்டுவிடும். இது சம்பள உயர்வுக்கு முட்டுக்கட்டை போடும், நிதி இழப்பையும் சந்திக்க நேரிடும்.



**கும்பம்**

உங்கள் வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை தனித்தனியாக வைத்திருப்பது இந்த வாரம் உங்களுக்கு நல்லது. இது வளர்ச்சியில் சிக்கல்களை சந்திக்க நேரிடும்.



**கன்னி**

இந்த வாரம் உங்கள் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். வீடு வாங்கும் போது, திறந்த கைகளுடன் பணத்தை செலவழிப்பதை தவிர்க்கவும்.




**மீனம்**

இந்த வாரம் நீங்கள் வீட்டின் இளைய உறுப்பினர்களின் படிப்பில் உதவுவீர்கள், இதனுடன் உங்கள் பெற்றோரும் உங்களைப் பற்றி பெருமைப்படுவார்கள்.

# YOGASANAM

## பார்சுவ பகாசனம்

***பலன்கள்:-***



- தோள், கைகள் மற்றும் மணிக்கட்டை பலப்படுத்துகிறது.
- முதுகுத்தண்டின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது.
- முதுகுத் தசைகளைப் பலப்படுத்துகிறது.
- சீரணத்தை மேம்படுத்துகிறது.
- வயிற்று உள் உறுப்புகளின் இயக்கத்தை பலப்படுத்துகிறது.
- உடல், மனம் இரண்டும் சமநிலையை அடைய உதவுகிறது.
- கவனத்தைக் கூர்மையாக்குகிறது.
- வாழ்க்கையின் சவால்களை சந்திக்கும் உறுதியை அளிக்கிறது.

***செய்முறை:-***

நேராக நிற்கவும்.

இடுப்பை தரையை நோக்கி இறக்கவும்.

மேல் உடலை வலது புறம் திருப்பி இரண்டு கைகளையும் வலது காலுக்கு வெளிப்புறம் சற்று பக்கவாட்டில் வைக்கவும். கைவிரல்களைப் பிரித்து வைக்கவும். இரண்டு கால் முட்டிகளும் அருகருகே இருக்க வேண்டும்.

கை முட்டியை சற்று மடக்கி, வலது கால் தொடையின் வெளிப்புறத்தை (கால் முட்டிக்கு அருகில் இருக்கும் தொடைப்பகுதி) இடது கை முட்டிக்கு மேல் வைக்கவும்.

மெதுவாக கால்களை உயர்த்தி கால் விரல்கள் மட்டும் தரையில் இருக்குமாறு வைக்கவும்.

உங்கள் உடலைச் சற்று முன்னோக்கி சாய்க்கவும்.

கைகளை நன்றாகத் தரையில் ஊன்றி இரண்டு கால்களையும் தரையிலிருந்து உயர்த்தவும். இப்பொழுது உங்கள் இடது கை உங்களின் உடல் எடையைத் தாங்கியபடி இருக்கும்.

20 வினாடிகள் இந்த நிலையில் இருக்கவும். பின் கால்களைக் கீழே வைத்து எழுந்து நிற்கவும். பின் இடது புறம் திரும்பி இவ்வாசனத்தைச் செய்யவும்.

## ‟மவுஸ்‟ உருவாக்கியவர் யார்?

1960 ஆம் ஆண்டு, ஸ்டான்போர்ட் ஆராய்ச்சி கல்வி நிறுவனத்தில் மின் பொறியியல் படித்த டக்ளஸ் ஏங்கல்பார்ட் என்பவர், மக்கள் புதிய கணினிகளைப் பயன்படுத்தும் விதம் பயனுள்ள வழியில் இல்லை என்பதை உணர்ந்தார்.

அந்த சமயத்தில், வீடியோ கேம்களின் இன்றைய கால ஜாய்ஸ்டிக் போன்ற சாதனமாக ‟மவுஸ்‟ பயன்படுத்தப்பட்டது. இந்தச் சாதனத்தைப் பயன்படுத்துவது எளிதாக இருந்தது.

கணினியில் காட்டப்படும் ‟கர்சரை‟க் கட்டுப்படுத்தும் இரண்டு வட்ட சக்கரங்களைக் கொண்ட ‟பக்‟ (Bug) என்ற சாதனத்தை ஏங்கல்பார்ட் உருவாக்கினார்.



இது ஓர் அற்புதமான யோசனையாக இருந்தது.

1966 ஆம் ஆண்டில், நாசா ஏங்கல்பார்ட்டின் கண்டுபிடிப்பைப் பயன்படுத்தியது. இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஏங்கல்பார்ட், சக கண்டுபிடிப்பாளரான பில் இங்கிலீஷுடன் சேர்ந்து, சான் பிரான்சிஸ்கோவில் ஆயிரம் பேர் முன்னிலையில் ஒரு சாதனத்தை ‟டெமோ‟ செய்து காட்டினார். இது ‟மவுஸ்‟ என்று அழைக்கப்பட்டது. தொழில்நுட்ப உலகில் இந்த கண்டுப்பிடிப்பு பற்றி நிறைய விவாதங்கள் நடந்தன.

ஏங்கல்பார்ட் மற்றும் பில் இங்கீலிஷ் ஒரு புதையலை கண்டுப்பிடித்தது போல் உணர்ந்தார்கள்.

ஆனால், சிறிது காலத்தில் அவர்களின் மகிழ்ச்சி மறைந்துவிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் ஏங்கல்பார்ட் முதலீடு பெறுவது நின்றுவிட்டது.

அவரது குழு உறுப்பினர்கள் பெரும்பாலானோர் ஸ்டான்போர்டை விட்டு வெளியேறினர். அவர்களில் பில் இங்கிலீஷ் ஜெராக்ஸில் வேலை செய்யத் தொடங்கினார்.

1979-ம் ஆண்டு, ஒருவர் ஜெராக்ஸ் ஆராய்ச்சி மையத்தை உருவாக்க, தன்னிடம் இருந்த ஜெராக்ஸ் பங்குகளைக் கொடுத்தார்.

அந்த மனிதர் வேறு யாருமல்ல ஸ்டீவ் ஜாப்ஸ். அவரது நிறுவனத்தின் பெயர் ஆப்பிள். இது மட்டுமின்றி, ஜெராக்ஸின் ஆய்வு மையத்தில் இருந்தே ‟மவுஸ்‟ மீண்டும் அறிமுகமானது.

ஸ்டீவ் ஜாப்ஸ் இந்த யோசனையை மிகவும் விரும்பினார் என்று கூறப்படுகிறது. அதனால் அவர் தனது பொறியியல் குழுவை அவர்கள் என்ன செய்தாலும் உடனடியாக நிறுத்திவிட்டு, மவுஸை ஆப்பிள் தயாரிப்பாக மீண்டும் அறிமுகப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

‟மவுஸ்‟-ன் அசல் காப்புரிமை ஸ்டான்போர்ட் ஆராய்ச்சி கல்வி நிறுவனத்திடம் இருந்தது. அதாவது ஏங்கல்பார்ட்டிற்கு ‟மவுஸ்‟-ன் கண்டுபிடிப்பிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை.

ஏங்கல்பார்ட்டின் சிந்தனை அவரது காலத்திலிருந்து முன்னோக்கி இருந்தபோதிலும், , நிஜ உலகில் ‟மவுஸ்‟- ஐ வீடு வீடாக கொண்டு சேர்ப்பதற்கு ஸ்டீவ் ஜாப்ஸ் போன்ற ஒரு நபர் தேவைப்பட்டு

# Entertainment Corner

## ARUSUVAI SAMAYAL

## CHICKEN PICCATA

### INGREDIENTS:

2 Boneless Chicken Breast
½ cup All Purpose flour
½ tsp Salt
½ tsp Black pepper
3 tbsp Olive Oil

*For Sauce*

1 tbsp Olive Oil
5 Shallots chopped finely
3 tbsp Capers
2 cups Chicken Stock
75 grams Butter cold
2 tbsp Lemon Juice
3 tbsp Parsley chopped finely
½ tsp Salt
½ tsp Black pepper
1 Lemon sliced

### METHOD:

Take boneless chicken breast in a cutting board. You will be needing boneless skinless chicken breast. Butterfly the chicken breast (use a knife to open up the chicken breast like a book). Use a meat mallet the bash the chicken gently so it is even and flattened.

Now make the seasoned flour. Take flour in a bowl, season with salt and pepper. Mix well and set aside. You can add any dried herbs like thyme, parsley into the flour if needed.

Coat the chicken with seasoned flour on both sides. Set aside.

In a shallow Dutch oven, heat 3 tbsp olive oil. Place the chicken in the hot oil and pan fry on both sides for 2 mins. Remove to a clean plate and set aside.

Now for making the sauce. I like to clean the pan using a paper towel to remove the burnt flour particles. Add 1 tbsp extra olive oil and let it warm through. Add in chopped shallots and capers and saute for 1 min.

Add in chicken stock and use a spatula to scrape the burnt bits from the bottom. Let the chicken stock boil and reduce until it is half way reduced. Now add in lemon juice and mix well.

Place the chicken back into the sauce and coat on both sides. Now remove the chicken onto a clean serving dish.

Now to the sauce add in the butter. Make sure the butter is cold. Add little at a time and mix well so the sauce gets emulsified and turns creamy. Add in black pepper and parsley and mix well.

Spoon the sauce over the chicken and top with slices of lemon. Serve immediately.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 7 | 6 | 1 | 3 | 2 | 8 | 4 |
| 4 | 8 | 3 | 2 | 5 | 7 | 1 | 9 | 6 |
| 6 | 1 | 2 | 8 | 4 | 9 | 5 | 3 | 7 |
| 1 | 7 | 8 | 3 | 6 | 4 | 9 | 5 | 2 |
| 5 | 2 | 4 | 9 | 7 | 1 | 3 | 6 | 8 |
| 3 | 6 | 9 | 5 | 2 | 8 | 7 | 4 | 1 |
| 8 | 4 | 5 | 7 | 9 | 2 | 6 | 1 | 3 |
| 2 | 9 | 1 | 4 | 3 | 6 | 8 | 7 | 5 |
| 7 | 3 | 6 | 1 | 8 | 5 | 4 | 2 | 9 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 6 | | 1 | 3 | | | 8 |
| | 5 | 8 | | | | | 9 | |
| | 3 | | | | | | 1 | |
| | 6 | | 8 | | | 9 | 2 | |
| | | 3 | 4 | | 9 | 1 | | |
| | 4 | 9 | | | 6 | | 3 | |
| | 9 | | | | | | 8 | |
| | 1 | | | | | 6 | 7 | |
| 4 | | | 9 | 6 | | 3 | | 1 |

## விடுகதை விளையாட்டு

1. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன் நீரைக் கண்டு பதைபதைக்கிறான் -அது என்ன?

2. கலர்ப்பூ கொண்டைக்காரி காலையில் எழுப்பிவிடுவாள் -அது என்ன?

3. கந்தல் துணி கட்டியவன் முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான் -அது என்ன?

4. கடலிலே கலந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் -பூ எது?

5. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு வெள்ளைக் காகம் நிற்குது -அது என்ன?

6. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை -அது என்ன?

7. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது -அது என்ன?

## சொல் விளையாட்டு

| | | |
|---|---|---|
| சி ___ | | க ___ |
| | ? | |
| எல் ___ | | த ___ வி |

ஓர் எழுத்து நான்கு
சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

## சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1. க ரி க் கோ ல்
2. தொ லை ப் பே சி
3. இ ல க் க ண ம்
4. ஒ லி பெ ரு க் கி
5. பி ற ந் த நா ள்
6. அ டு க் கு மா டி
7. மு ன் னே ற் ற ம்
8. வ டி வ மை ப் பு

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1. குயில்
2. சோளம்
3. பஞ்சு
4. மின்விசிறி
5. தோலைபேசி

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

TNBIL04133 R.Dis.No.1845/2014




# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






**Joshua Daniel**
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.



DOT TO DOT DRAWING


## MEHENDI



## PAPER CRAFT



## படத்தில் உள்ள 12 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH